கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

கலைகலாசார பீடம்

நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு
2010/2011 (JULY/AUGUST - 2015)

# PSS- **4104** – **நிர்வாகச் சட்டங்கள்**

# (Administrative Law)

நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி I இல் இருந்து ஏதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி II இல் இருந்து ஏதேனும் ஒரு வினாவிற்குமாக மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

## பகுதி-I

01. அ) சட்டம் என்பதற்கு சட்டவியலாளர்களால் கொடுக்கப்பட்ட கோட்பாடு ரீதியான கருத்துக்களை விளக்குக. (10புள்ளிகள்)

ஆ) சட்டத்திற்கு கொடுக்கப்படும் நவீன வரைவிலக்கணம் யாது? (05புள்ளிகள்)

இ) "நீதிமன்றங்கள் செய்கின்ற பொருள்கோடல் (Interpretation) ஊடாகவே சட்டத்தை விளங்கிக்கொள்ள முடிகின்றது". சிறுகுறிப்பு வரைக. (10புள்ளிகள்)

2. அ) சட்டத்தின் தோற்றுவாய் என்பதில் இருந்து கருத்திற் கொள்வது யாது? (05புள்ளிகள்)

ஆ) சட்டத்தின் தோற்றுவாய்களை வகைப்படுத்துக. (05புள்ளிகள்)

இ) வழக்காறுகளை சட்டத்தின் தோற்றுவாயாக கொள்வதில் நீதிமன்றங்கள் கையாளுகின்ற பரிட்சார்த்தங்கள் யாது? (15புள்ளிகள்)

03. அ) கண்டியச் சட்டத்தின் பிரயோகத்தில் Williams vs Robetson வழக்குத் தீர்ப்பு ஏற்படுத்திய தாக்கம் யாது? (05புள்ளிகள்)

ஆ) தேச வழமைச் சட்டத்தில் நிலையாக வாழுநர் (Inhabitance) என்பதற்கு சட்ட விளக்கம் தருக. (05புள்ளிகள்)

இ) ஆங்கிலச் சட்டம் இலங்கையின் சட்ட முறைமையில் இடம் கொண்ட வழிகளைத் தருக.

(15புள்ளிகள்)

04. அ) வலுவிகந்த கோட்பாட்டைப் பிரயோகிப்பதில் நீதிமன்றங்களை நெறிப்படுத்தும் ஏதுக்கள் எவை? (05புள்ளிகள்)

ஆ) நிர்வாகச் சட்டத்தின் பிரயோகம் இரு கோட்பாடுகளின் அடிப்படையில் அமைகின்றது. அதாவது, வலுவான செயல் (Intra-vires), வலுவற்ற செயல் (Ultra-vires) இதில் Ultra-vires என்பதன் கருத்தை விளக்குக.

(20புள்ளிகள்)

## பகுதி –II

05. “சட்டத்தின் கீழ் அதிகாரத்தை பெற்றவர்கள் அவ் அதிகாரத்தைப் பிரயோகிக்கும்போது இயற்கை நீதிக் கோட்பாட்டிற்கு உட்பட்டு அதிகாரப் பிரயோகத்தை செய்தல் வேண்டும். இயற்கை நீதியை மதிக்கத் தவறினால் நீதிமன்றம் அவ் அதிகாரப் பிரயோகத்தை இயற்கை நீதிக் கோட்பாட்டின் இருகிளைகளில் இரு பக்கமும் கேள் (Audi altram Parkem) தனக்குத் தானே நீதி செலுத்த முடியாது (Nemo Judex non Sua Causa) வழி நின்று கேள்விக்குட்படுத்தும்”. இக்கூற்றை தீர்க்கப்பட்ட வழக்குகளை ஆதாரமாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க.

(25புள்ளிகள்)

06. “கையளிக்கப்பட்டது கையளிக்கப்படக் கூடாது (Delicatio non Parter Delicare) என்ற முதுமொழி - Maxim பின்பற்றபடுகின்ற போதிலும் விரைவான, திறமையான நிர்வாகச் செயற்பாட்டிற்கு கையளிக்கப்பட்ட சட்டவாக்கம் (Deligated Legislation) அவசியமானது”. இக்கூற்றை கையளிக்கப்பட்ட சட்டவாக்கத்திற்கான காரணங்களையும் அவற்றின் மீதான கட்டுப்பாடுகளையும் அடிப்படையாக வைத்து மதிப்பீடு செய்க.

(25புள்ளிகள்)